**OPEN ACCESS**

Manuscript ID: TAM-070420236214

Volume: 7

Issue: 4

Month: April

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.01.2023

Accepted: 20.03.2023

Published: 01.04.2023

Citation:
Vijayakumar, B. "A Comparative Study of 'Kāman Festival' in Tamil Nadu and the Archaeological Remains of Madan Kamdev Temple in Assam." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 4, 2023, pp. 93–101.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i4.6214

*Corresponding Author:
vijayakumar.ciil@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# A Comparative Study of 'Kāman Festival' in Tamil Nadu and the Archaeological Remains of Madan Kamdev Temple in Assam

**B. Vijayakumar**
*Assistant Professor, Department of Modern Indian Languages and Literary Studies*
*Gauhati University, Guwahati, Assam*
*https://orcid.org/0000-0002-9915-192X*

**Abstract**
Rathi and Manmadha are the epitomes of beauty who stand as witnesses of unrequited love in Puranas. The story of Manmadha who holding his sugarcane bow and stirring the hearts of lovers with flowers, burning to ashes due to Shiva's anger and coming back to life due to Rathi's prayer, is widely popular among the people. The event is celebrated under the name 'Kaman festival' as one of the popular festivals of Tamils. Many Tamil classical texts refer to this festival which was celebrated as a grand festival. The story of Manmadha being burnt by Shiva is still celebrated as a common festival every year in the villages of Tamil Nadu. Kaman, who was regarded as the god of love, has many accounts of his early beginnings as a deity to be worshipped. Similarly, the common story is presented with variations across the India. It is now served as 'Kamandi' in some parts of Tamil Nadu. This article aims to compare the social environment of the time by analyzing the festival celebrated in Tamil Nadu in the southern part of India, the history of the Madan Kamdev temple discovered by the archeology department of Assam state in the north-eastern part of India, and the sculptures of the temple and the sentiments of the people.

**Key Words:** Kaman festival, Kamandi, Rathi, Manmadhan, Madhan Kamdev Tample

**References**

1. Patowary, K.N. 2008. *A Critical Study of the Sculptures of Madan Kamdeva*, unpublished Ph. D. Thesis, Gauhati University, Guwahati.

# தமிழக காமன் விழாவும் அசாமில் மதன் காம்தேவ் கோவிலின் தொல்லியல் எச்சங்களும்: ஓர் ஒப்பீட்டு ஆய்வு

***முனைவர் பி. விஜயகுமார்***
உதவிப் பேராசிரியர்
நவீன இந்திய மொழிகள் மற்றும் இலக்கிய ஆய்வுகள் துறை
கவுகாத்தி பல்கலைக்கழகம், குவஹாத்தி

***ஆய்வுச்சுருக்கம்***
*ரதி-மன்மதன் கதை புராணகாலம்தொட்டு இன்றுஇவரை பரவலாகப் சொல்லப்பட்டுவருகிறது. இக்கதையினைக் கொண்டு தமிழகக் கிராமங்களில் மன்மதன் விழா இன்றளவும் நடைபெற்றுவருகிறது. தமிழகத்தில் ரதி, மன்மதன் ஆகியோருக்கான சிற்பங்கள், சிலைகள் காணப்பட்டாலும் பெரிய அளவில் இவர்களுக்கென தனித்த கோவில்கள் எதுவும் இல்லை. ஆனால் அசாம் மாநிலத்தில் மன்மதனுக்கென்று பெரிய கோவில் ஒன்று இருக்கிறது. இந்தியாவின் தென் பகுதியில் உள்ள தமிழகத்தில் கொண்டாடப்படும் காமன் பண்டிகையும், இதே பொருண்மையில் வடகிழக்கு இந்தியப் பகுதியில் உள்ள அசாம் மாநிலத்தின் தொல்லியல் துறையால் கண்டுபிடிக்கபட்ட மதன் காம்தேவ் கோவிலின் வரலாற்றையும், அக்கோவிலின் சிற்பங்கள் மற்றும் அங்குள்ள மக்களின் இக்கோவில் மீதான உணர்வுள் ஆகியவற்றினை கள ஆய்வின் மூலம் கண்டறிந்து அக்கால சமூகச்சூழலை வெளிப்படுத்தும் நோக்கில் இக் கட்டுரை அமைகிறது.*
***முக்கியச்சொற்கள்:*** *காமன் விழா, காமண்டி, ரதி, மன்மதன், மதன் காம்தேவ் கோவில்*

## அறிமுகம்

புராணங்களில் இணைபிரியாத காதலுக்குச் சாட்சியாக நின்று அழகின் சிகரமாக விளங்கியவர்கள் ரதியும் மன்மதனும் ஆவர். கரும்பு வில்லினாலே மலர்க்கணைகளைத் தொடுத்து காதலர்களின் உள்ளங்களைத் தூண்டிவிடும் மன்மதன் சிவனின் கோபத்தால் எரிந்து சாம்பல் ஆனதும் ரதியின் வேண்டுதலால் மீண்டும் உயிர்ப்பெற்றதும் மக்கள் மத்தியில் பரவலாகத் தொன்றுதொட்டு வழங்கிவரும் கதை. இக்கதையின் பொருண்மை கொண்ட நிகழ்வு தமிழர்களின் பண்டிகைகளுள் ஒன்றாக காமன் பண்டிகை என்ற பெயரில் கொண்டாடப்பட்டு வருகிறது. பழந்தமிழ் நூல்கள் பலவும் பெருவிழாவாகவே கொண்டாடப்பட்டு வந்த இந்தப் பண்டிகையைப் பற்றிக்குறிப்பிடுகின்றன. மன்மதனை சிவன் எரித்த கதை இன்றும் தமிழகத்தின் கிராமங்களில் ஆண்டுதோறும் “காமன் பண்டிகை” என வழங்கப்படுகிறது. இது தற்காலத்தில் “காமாண்டி” என தமிழகத்தின் சில பகுதிகளில் வழங்கப்படுகிறது காதற்கடவுளாகக் கருதப்பட்ட காமன், வழிபாட்டிற்குரிய தெய்வமாகப் பண்டைக்கால தொடக்கம் விளங்கியிருப்பதற்கு பல செய்திகள் உண்டு. காமன் கதை பல்வேறு திரிபுகளோடு இந்தியாவின் பலபகுதிகளிலும் வழங்கப்பட்டு வருகிறது. இது “காமன் கூத்து” என்ற பெயரில் இலங்கையின் மலையகப் பகுதிகளில் கொண்டாடப்படுகிறது.

## இலக்கியங்களில் காமன் பண்டிகை

மன்மதன், மகரக் கொடி ஆகியன பற்றிக் சங்க இலக்கியங்களில் நிறைய குறிப்புகள் கிடைக்கின்றன. பண்டைக்காலத்தில் இவ்விழா “உள்ளிவிழா” என்ற பெயரில் வழங்கப்பட்டுள்ளது.

***..கொங்கர்***
***மணி அரை யாத்து மறுகின் ஆடும்***
***உள்ளி விழவின் அன்ன[1]***

***(அகநானூறு. 368)***

கொங்கு நாட்டினர் மணியினை இடையில் கட்டிக்கொண்டு ஆடும் உள்ளி விழாவில், விழாக் காணும் மக்கள் எழுப்பிய ஆரவாரம் என்று அகநானூறு குறிப்பிடுகிறது. ஆக, கொங்கு நாட்டில் ஒலி எழுப்புகின்ற மணிகளைக் கோர்த்து இடுப்பில் கட்டிக் கொண்டு நடுத்தெருக்களில் ஆடிப்பாடிக் கொண்டு இவ்விழாவைக் கொண்டாடினர் என்பது இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டதைத் தெரிவிக்கிறது. இதன் தொடர்ச்சி இன்றளவும் "சித்திரைத்திருவிழா", "வசந்த திருவிழா" என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது. வசந்தன் என்பது மன்மதனின் பெயர்களுள் ஒன்று.

மன்மதன் என்பதற்கு மனதைக் கடைபவன் (காமன்), காதல் கடவுள் (God of love) அல்லது ஆண், பெண் இடையே காதலை ஏற்படுத்துபவனாகக் கருதப்படும் கடவுள் என்று பொருள். மன்மதனின் அம்பிலுள்ள மலர்களுள் ஒன்று தாமரை. மன்மதனுடைய கொடி மகரக் கொடி. மகரம் என்னும் சொல் மீனைக் குறிக்கப் பயன்பட்ட சொல். மன்மதனின் மகரக் கொடி அக நானூற்றிலேயே வந்துவிடுகிறது.

***நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்***
***ஆல முற்றம் கவின்பெறத் தைஇய***
***பொய்கை சூழ்ந்த பொழில்மனை மகளிர்***
***கைசெய் பாவைத் துறைக்கண் இறுக்கும்***
***மகர நெற்றி வாந்தோய் புரிசைச்***
***சிகரம் தோன்றா சேணுயர் நல் இல்***
***புகாஅர் நல்நாட் டதுவே[2]***

***(அகநானூறு.181)***

சிவபெருமான் எழுந்தருளிய ஆலமுற்றம் என்னும் இடத்திலே, அழகாக அமைந்த பொய்கைகள் சூழ்ந்த சோலையில் விளையாடும் சிறுமியர் செய்த மண்பாவைகள் இருக்கும் துறையில் மகரக்கொடியை உச்சியில் கொண்ட வானைத் தீண்டும் மதிலையும், உச்சியைக்காண முடியாதவாறு ஓங்கி உயர்ந்துள்ள மாடங்களையும் உடைய காவிரிப்பூம்பட்டினத்தை உடையது சோழநாடு என்று பொருள் படும் இப்பாடலில் காமன் விழா நடபெறுகையில் கட்டப்படும் மகரக்கொடி குறிக்கப்படுகிறது.

***காமர் கடும்புனல் கலந்து எம்மோடு ஆடுவாள்,***
***தாமரைக் கண் புதைத்து, அஞ்த் தளர்ந்து,***
***அதனோடு ஒழுகலான்[3]***

***(கலித்தொகை.39)***

விருப்பம் தரும் வகையில் வேகமாக வரும் வெள்ளத்தில் எங்களோடு நீராடிக் கொண்டிருந்தவள் தன் தாமரை போன்ற கண்களை மூடியவாறு, அச்சங்கொண்டு கால்கள் தளர்ந்ததினால் வெள்ளத்தோடு செல்ல, ஓர் இளைஞன், தன் நீண்ட சுர புன்னையின் நறிய குளிர்ந்த மாலை அசைந்தாடப் பாய்ந்து, இரக்கத்தோடு பூண் அணிந்த இவளின் மார்பைத் தன் மார்போடு அணைத்து வந்து கரை சேர்த்தான் என்று கலித்தொகையிலும்

***பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்***
***ஒருவர்கண் நின்றொழுகு வான்[4]***

***(திருக்குறள். 1197)***

காமதேவன், காதலர் இருவர் இடையேயும் இருந்து இயங்காது, ஒருவர் பக்கத்திலேயே இருந்து செயல்படுவதால், அவன் என்னுடைய வருத்தத்தையும் தடுமாற்றத்தையும், உணரமாட்டான் போலும்! என்று திருக்குறளிலும் வருகிறது.

இந்த பழந்தமிழ் இலக்கியச் சான்றுகள் பண்டைக்காலம் தொட்டு காமனுக்கு தமிழகத்தில் இருந்த முக்கியத்துவத்தை காட்டுகிறது.

**மன்மதன் பற்றிய தொன்மம்**

திருமாலின் மகன் மன்மதன். தென்றல் இவரது தேர். வாகனம் பச்சைக் கிளி. வாள் தாழம்பூ மடல். கொடி மீன்கொடி. இவரது கையில் கரும்பு வில் இருக்கும், வில்லின் நாண் தேனீக்களால் (வண்டுகளால்) ஆனது. தாமரை, நீலோற்பலம், அசோகு, முல்லை, மாம்பூக்களால் ஆன அஸ்திரங்களை வைத்திருப்பார். இவற்றுக்குப் பஞ்ச பாணங்கள் என்று பெயர். இவருக்கு உகந்த காலம் வசந்த காலம். இவ்வளவு மேன்மை பொருந்திய மன்மதனை, பார்வதி சிவபெருமானின் தவத்தைக் கலைக்க அனுப்புகிறார். அவரும் காமக்கணைகளைத் தொடுக்கிறார். சினமுற்ற சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து காமனை எரித்துச் சாம்பலாக்குகிறார். இதைக்கண்ட மன்மதனின் மனைவி ரதி ஆற்றொணாத்துயரில் அழுது புலம்புகிறாள். சிவனிடம் மண்டியிட்டு மன்மதனை மீண்டும் உயிர்ப்பிக்குமாறு வேண்டுகிறாள். கோபம் தணிந்த சிவன் ரதியின் வேண்டுகோளுக் கிணங்க மன்மதனை உயிர்ப்பிக்கிறார்.

**காமன் விழா நடைபெறும் முறை**

காமன் எரிக்கப்படுவதும், பின்னர் உயிர்த்தெழச் செய்யப்படுவதும் காமன் விழாவின் முக்கிய நிகழ்வு. இவ்விழா ஒவ்வோர் ஆண்டும் மாசி மாதம் கொண்டாடப்படுகிறது. 15 நாட்கள் தொடர்ச்சியாக நடக்கும் இந்நிகழ்வானது பொது இடத்தில் நடைபெறும். கதைப்பாடலாக காமன் கூத்தை நிகழ்த்துவார்கள். முதலில் ஒரு பொது இடத்தைத் தேர்வு செய்து மன்மதனுக்காகப் பந்தல் அமைப்பார்கள். அவ்விடத்தில் சாணம் மெழுகி, கம்பு நட்டு, அதன் மேல் வைக்கோல்பிரி சுற்றி அதன் தலையில் வரட்டி வைத்துக் கட்டப்படும். மாவிலை, வேப்பிலை, குங்குமம், திருநீறு வைத்து அலங்காரம் செய்யப்பட்டிருக்கும். இந்த உருவம் காமதேவன் மன்மதனை உருவகப்படுத்தும். அடுத்த வரும் நாட்களில் இந்த நிகழ்ச்சி இரவில் தொடங்கி நடத்தப்படும். மன்மதன் மற்றும் ரதி என இரு குழுவாகப் பிரிந்து பாடுவார்கள். ரதிதேவியின் சோகங்களைச் சுமந்த காதல் சொட்டும் பாடல்களே இந்தக் காமன் பண்டிகையின்போது இடம்பெறும். நிறைவாக, ரதி மன்மதன் வேடமிட்டவர்கள் ஊர்வலமாக பந்தலுக்கு வருவார்கள். முன்பே பந்தலில் நடப்பட்டுள்ள ஆலமரக்கிளையின் அடியில் பரமசிவன் உட்கார்ந்து தவத்தில் ஆழ்ந்திருப்பார். அருகில் சொக்கப்பனை போன்ற அமைப்பில் ஒரு கூம்பு வடிவத்தில் கட்டப்பட்டுள்ள தென்னங்குருத்தின் நடுவே மன்மதன் உருவம் வரையப்பட்டுள்ள படம் வைக்கப்பட்டிருக்கும். மன்மதன் பரமசிவனின் தவத்தைக் கலைக்கப்போகிறான். ரதி அவனிடம் அப்படிச் செய்து சிவனின் கோபத்துக்கு ஆளாக வேண்டாம் என்று இறைஞ்சுவாள். ரதியின் உருக்கமான வேண்டுதல் தொடங்கும். பறைக்கொட்டும் தொடர்ந்து முழங்கும். பந்தலுக்குத் திரும்பியதும் மன்மதன் தவமிருக்கும் சிவனை நோக்கி மலர் அம்பு எய்தும் விதமாக, மன்மதன் படம் இருக்கும் பக்கத்தில் தொங்கும் இரட்டைவாணம் பற்ற வைக்கப்படும். உடனே அது சீறியபடி சிவனை நோக்கிப் போகும். மறுமுனையை அடைந்ததும் இரட்டை வாணத்தின் மறுவாணம் தானாகவே பற்றிக்கொண்டு மன்மதனை நோக்கிச் சீறிப்பாயும். சிவன் நெற்றிக்கண்ணைத் திறந்து காமனை எரிப்பதாக அர்த்தம். காமன் படத்தின் மீது கற்பூரத்தைக் கொளுத்துவார்கள். படம் பற்றியெரிய அதைத்தாங்கி நின்ற மற்ற கட்டுமானமும் ‘சட சட’ வென எரியும். அதிர் வேட்டு முழங்கி காமதகனம் முடிவுபெறும். மன்மதனின் மனைவியாகிய ரதிதேவி அடுத்த மூன்று நாட்கள் ஒப்பாரி வைத்துப் புலம்புவாள். மூன்று நாள் முடிந்தவுடன் மன்மதனுக்கு சிவன் மீண்டும் உயிர் கொடுத்துவிட்டதாகக் கூறி மன்மதனுக்கு

மலர்பந்தல் அமைக்கப்படும். மன்மதன் உயிரோடு மீண்டும் வந்துவிட்டதைக் கொண்டாடும் வகையில் பெண்கள் அனைவரும் மாவிளக்கு வைத்து வழிபடுவார்கள். தமிழகத்தில் கொண்டாடப்படும் இந்த காமன் பண்டிகை விழாவும், இதே பொருண்மையில் வட கிழக்கு இந்தியப் பகுதியில் உள்ள அசாம் மாநிலத்தின் தொல்லியல் துறையால் கண்டுபிடிக்கபட்ட மதன் காம்தேவ் கோவிலின் வரலாறும் ஒத்ததாக் காணப்டுகிறது.

### மதன் காமதேவன் தொல்லியல் களம்

பர்மாவிற்கு மேற்கிலிருந்து பீகார் வரையான பரந்த பகுதிக்கு முன்னொரு காலத்தில் காமரூபா (Kamarupa) என்று பெயர். காம்ரூப் (Kamrup) எனபதற்கு மீண்டும் உருப்பெறுதல் என்று பொருள். காம்ரூபா தற்போது அசாம் என்று அழைக்கப்படுகிறது. அசாம் மாநிலத்தின் காம்ரூப் மாவட்டம் பாய்ஹட்ட சரியாளி என்ற ஊரில் தேவாங்கிரி குன்றின் உச்சியில் மதன் காம்தேவ் என்ற ஒரு கோயில் அமைந்துள்ளது. இந்த கோவில் இருக்கும் குன்று 2.87 சதுர கி.மீ சுற்றளவைக் கொண்டது. இதில் கொப்பேஷ்வர் (Gopeshvar), பித்தார்கொலா (Bhitarkhola) என்ற இரண்டு கிராமங்கள் அமைந்துள்ளன. இந்த கோவிலின் வடக்கிலும் கிழக்கிலும் தேசிய நெடுஞ்சாலைகளும் அடிப்பக்கத்தில் தெற்கில் மைனா சுந்தரி (Maina sundari) என்ற கிராமமும் மேற்கில் பாமுனிகாவூன் (Bamunigaon) என்ற கிராமமும் அமைந்துள்ளன. தேசிய நெடுஞ்சாலையை ஒட்டிய பகுதி மதன்பூர் (Madanpur) என்று அழைக்கப்படுகிறது. இப்பகுதியைச் சுற்றி தொடச்சியாக் குன்றுகளும், சமவெளிப்பகுதியும், படுகைகளும் அமைந்துள்ளன. மதன் காம்தேவ் கோவிலினைச் சுற்றி குன்றின் அடிவாரத்தில் மதன்குரி என்ற நீரோடை வடகிழக்கு நோக்கி பாய்ந்து இப்பகுதியை அழகாக்குகிறது.

மதன் காம்தேவ் கோவில் அசாமின் பொக்கிஷம். இடிபாடுகளுடன் கூடிய மதன் காம்தேவ் கோவில் ஒரு தனிமையான இடத்தில் சிற்பச் சிதிலங்களுடன் 500 சதுர மீட்டர் பரப்பளவில் சிதறிக் கிடைக்கிறது. அசாமின் கஜூராகோ என்று அறியப்படும் மதன் காம்தேவ் கோயில் பழங்கால தொல்லியல் எச்சங்களைத்தரும் ஒரு அற்புதமான இடம். இந்தச் சிதிலமடைந்த கோயில்களைக்கொண்ட தொல்லியல் தளம் பண்டைக்கால அசாமிய மக்களின் கலாசாரத்தைச் சித்தரித்து நிற்கிறது.[5] பிரிட்டிஷ் அதிகாரிகளில் ஒருவரான கேப்டன் டெல்டன் 1855 இல், வங்காளத்திலிருந்து வெளிவந்த ஆசியடிக் சொசைட்டி இதழில் வெளியிடப்பட்ட அவரது கட்டுரையின் மூலம் அஸ்ஸாமின் குவகாத்தி பகுதியின் சங்கசாரி கிராமத்தில் உள்ள, சில்சாகோ அருகே பரந்த தொல் பொருள் இடிபாடுகள் இருப்பதைப் பற்றி உலகிற்கு அறிவித்தார். அவருக்குப் பிறகு அந்தத் தளம் அறிவார்ந்தவர்களின் கவனம் பெறுவதற்காக மேலும் நூறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்து.

1977 ஆம் ஆண்டு அஸ்ஸாம் மாநில அரசின் தொல்லியல் இயக்குநரகம் இந்த இடத்தை அதன் பொறுப்பில் எடுத்து சில கட்டங்களாக அகழாய்வுப் பணிகளை தொடங்கியது. முதற்கட்டமாக ஒரு சிறு பகுதி மட்டுமே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் பிறகு 1981-82 இல் காடுகளை நீண்ட காலமாக ஆய்வு செய்து சுத்தம் செய்தபின் 12 டிற்கும் மேற்பட்ட கல் மற்றும் செங்கற்கள் கொண்டு கட்டப்பட்ட கோவில்கள் இருப்பதைத் தொல்லியல் துறையினர் கண்டறிந்தனர்.

இந்த கோவில்கள் அனைத்தும் தற்போது பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன. அதேபோன்று மதன் காம்தேவ் கோவியில்

பக்கத்தில் உள்ள இரு குன்றுகளிலும் ஜல்பேஷ்வர் நரசிங்கா பர்வத் ஆகியோரின் கோவில்கள் சிதிலமடைந்த நிலையில் சிதறிக்கிடக்கின்றன. ஆய்வு வேலைகள் இன்றளவும் தொடர்கின்றது; ஆய்வாளர்கள் ஒவ்வொரு முறையும் புதியபுதிய கண்டுபிடிப்புகளை வெளிக்கொணர்கின்றனர். தற்போது இந்த இடம் பக்தர்களும், தொல்லியல் ஆர்வலர்களும், சுற்றுலா செல்வோரும் அதிகளவில் வந்து செல்கின்ற இடமாக உள்ளது. இதனால் எப்போதும் இங்கு மக்கள் கூட்டத்தைக் காணமுடிகிறது.

மதன் காம்தேவ் கோவில் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதி பண்டைய கால மக்களின் சமூகம், அவர்களின் கலை மற்றும் கலாச்சாரத்தினைப் படம் பிடித்துக்காட்டும் இடமாக உள்ளது. இந்தத் தொல்லியல் தளத்தின் மூலம் அசாம் மக்களின் கலாச்சாரத் தொன்மையையும் அவர்கள் சார்ந்திருந்த வழிபாட்டையும் இதன்மூலம் அறிய முடிகிறது. இங்கு சிதறிக்கிடக்கும் சிற்பங்களைக்கொண்டு தொல்லியல் துறை ஒரு அருங்காட்சியகத்தை அமைத்துள்ளது. இதைப் பார்க்கு போது வரும் நாட்களில் இதை இன்னும் மேம்படுத்திப் பாதுகாக்க வேண்டிய தேவை இன்னும் நிறைய உள்ளது என்பது தெரிகிறது.

## மதன் காம்தேவ் கோவிலின் வரலாறு

மதன் காம்தேவ் கோவில் புராணங்களிலும் காப்பியங்களிலும் இடம்பெற்றுள்ளதாக இங்குள்ளவர்கள் கூறுகின்றார்கள். காம் திரியோதசி திதி என்பது மார்ச்-ஏப்ரல் மாதத்தில் பெரும் பக்தியுடன் இங்குளவர்களால் இக்கோவிலில் கொண்டாடப்படுகிறது. இது மக்களை துன்பத்திலிருந்து விடுவித்து மோட்சம் அடைய வழிவகுக்கும் என்று நம்பப்படுகிறது. இந்த கோவில் கி.பி 11 மற்றும் 12 ஆம் நூறாண்டளவில் பால அரச மரபினர்களால் காமரூபா பகுதி ஆளுகையின் கீழ் இருந்தபோது “இந்திரபால” அல்லது “கோபால” என்னும் அரசர்களால் கட்டப்பட்டிருக்கலாம் என்று தொல்லியல் துறையால் நம்பப்படுகிறது. மதன் காம்தேவ் கோவில் கி.பி 15 ஆம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதிவரை வழிபாட்டில் இருந்திருக்கக் வேண்டும். இங்குள்ள சிற்பங்களையும் சிதிலமடைந்த பிரதான கோவிலையும் எஞ்சியிருக்கும் பீடத்தையும் மற்றும் இதன் கட்டுமான நுட்பங்களைக்கொண்டு பார்க்கும் போது இது கி.பி 12 ஆம் நூற்றாண்ளவில் மிகப்பெரிய கட்டுமானமாக இருந்திருக்க வேண்டும். இக்கோவில் தற்போது சிதறிக்கிடப்பதற்கு களாபஹர் (Kalapahar) ஊடுறுவல் அல்லது 1897 இல் நிகழ்ந்த மிகப்பெரிய நிலநடுக்கம் காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

## களாபஹர் ஊடுறுவல்

வங்காள சுல்தான், சுலைமான் கரரானியின் படைத்தளபதியாக இருந்தவர் களாபஹர். கொச் அரசர் நாராயண்ணின் சம காலத்தவர். காமதாபூர் ராஜ்ஜியத்தினை கட்டி எழுப்பிய பின்பு நாராயணன் தனது தம்பி சிலராய் தலைமையில் ஒரு ஆக்ரோஷமான படை நகர்வு ஒன்றை வங்காளத் தின் மீது முன்னெடுத்தார். சினங்கொண்ட களாபஹர் இதை முறியடித்தோடு மட்டுமல்லாமல் சிலராயையும் கைது செய்து சிறையில் அடைத்தார். இதோடு மட்டுமல்லாமல் கொச் அரசின் மீது 1568இல் போர் தொடுத்தார். கொச் அரசின் பெரும்பான்மையான நிலப்பகுதி இப்படையெடுப்பில் வீழ்ந்தது. இந்தக் கால கட்டத்தில் படை நடத்திய களாபஹர் இந்தக் கோவிலை இடித்திருக்கக்கூடும் என்பதும் சிலரின் நம்பிக்கையாக உள்ளது.

### 1897 நில நடுக்கம்

வடகிழக்கு இந்தியா அடிக்கடி நில நடுக்கம் ஏற்படும் பகுதி. 1897 இல் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் இப்பகுதியில் உள்ள சில கோவில்களை தரைமட்டமாக்கியது. இதுவே இக்கோயிலின் சிதறுண்டு கிடக்கும் சிற்பங்களுக்கும் சிதிலமடைந்த கோயிலுக்கும் காரணம் எனத் தொல்லியல் துறை கூறுகின்றனர். ஒரேதிசை நோக்கி சிதறுண்டு கிடக்கும் சிற்பங்களும் இதை மெய்ப்பிக்கும் வகையில் இருப்பதைக் கள ஆய்விற்குச் சென்ற இக்கட்டுரை ஆசிரியரால் காணமுடிந்தது.

### மதன் காம்தேவ் கோயிலின் சிறப்பு

மதன்காம்தேவ் கோயிலின் அமைப்பை பார்க்கும்போது இது நஹார் பாணி (Nahari Architect) கட்டுமானக் கலையை ஒத்ததாகத் தெரிகிறது. இது பஹாரி கட்டுமான பாணி என்றும் அழைக்கப்படுகிறது. இந்த அமைப்பில் நடுவில் முற்றமும் நான்கு பக்கமும் அழகிய வேலைப்படுகளுடன் கூடிய வளைந்த பால்கனிகளும் இருக்கும். இந்த பாணி வட கிழக்கு இந்தியாவில் பிரம்மபுத்ராவின் வடகரையில் அமைந்த கோயில்வரை எட்டியிருப்பது வியப்பை அளிக்கிறது. இக்கோயில் மூன்று பகுதிகளைக் கொண்டிருந்திருக்கிறது. முதலில் கல்லால் ஆன மலர் வடிவமைப்பு வளைவு கொண்ட நுழைவாயில், அதன் இரண்டாவது பகுதியாக முன்மண்டபம், அதன் பிறகு பெரிய மண்டபம் அல்லது கர்ப்பகிரகம் இருந்திருக்கிறது. இதில்தான் பிரதான தெய்வம் இருந்தது. இன்று, கர்ப்பகிரகம் ஒரு கூரையற்ற மண்டபமாக உள்ளது. உமா-மகேஸ்வரன் ஆகியோரின் சிலைகள் இந்த கோயிலின் முக்கிய தெய்வமாக வணங்கப்படுகிறது. இச்சிலை கருங்கல்லால் செய்யப்பட்டுள்ளது. இங்கு மகேஸ்வரன் சிவன், மனைவி உமாவை ஒரு உணர்ச்சிமிக்க நிலையில் கோயிலின் கருப்பொருளுக்கு ஏற்ப அரவணைத் திருப்பதைக் காணலாம். ஆணும் பெண்ணும் உணர்ச்சிகரமாக இனைந்த நிலையில் சுவரில் உள்ள சிற்பங்கள் இக்கோவில் அசாமின் கஜுராகோ என்பதற்கு போதுமானதாக உள்ளது. இந்த பிணைப்பு தெய்வீகமாகத் தெரிகிறது. பாரம்பரிய கோவில்களிலிருந்து சற்று வித்தியாசமான வழிபாட்டின் சாட்சித்தை இது வழங்குகிறது. இது அசாமில் இருந்த மக்களிடம் அனுமதிக்கப்பட்ட ஒரு தைரியமான வழிபாட்டு முறையாக உள்ளது.

காமத்தின் கடவுளான மன்மதன் சிவனின் தவத்தைக் கலைக்க முயன்றாதால் சிவன் தன் மூன்றாவது கண்ணைத்திறாந்து மன்மதனை சாம்பலாக்கியபின் ரதியின் வேண்டுகோளுக்கிங்ணக மன்மதன் மீண்டும் உருவம் பெற்று அவரது மனைவி ரதியைச் சந்தித்த இடம் இது. இதனால் இந்தப் பகுதி காம்ரூப் (Kamrup) என்று அழைக்கப்படுகிறது என்று தீரஜ் குமார் தேகா என்பவர் கூறுகிறார்[6] (தீரஜ் குமார் தேகா). எவ்வாறாயினும், காமத்தை வெளிப்படுத்தும் ஏராளமான சிற்றின்பச் சிற்பங்களுக்காகவே இப்பெயர் பெற்றிருக்கக்கூடும் என்பதை யாவர் மனதும் தர்க்கரீதியாக ஒப்பும். இந்த சிதிலமடைந்த கோவில் குறிப்பிடத்தக்கதாக இருப்பதற்கு முக்கிய காரணம், அதன் அலங்கரிக்கப்பட்ட உருவங்களில் நிர்வாணத்தை தைரியமாக வெளிப்படுத்துவதுதான். இது உண்மையில் அசாமில் ஒரு ஆச்சரியமான விதிவிலக்கு. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உடல் நெருக்கத்தை வழிபாட்டு முறையின் ஒரு பகுதியாகக் கருதும் தந்திரத்திற்குப் பெயர் பெற்ற காமாக்யா கோயிலில்கூட, அதன் சுவரில் அத்தகைய சிற்பம் இல்லை. மற்றொரு விதிவிலக்கு கோவில் அமந்துள்ள திசை. வழக்கமாக கோவில் கிழக்கு நோக்கி இருக்கும் ஆனால் இக்கோவில் மேற்கு நோக்கி உள்ளது.

மலை உச்சியில் அமைந்திருந்த கோவிலுக்கு தற்போது சிமெண்ட் பாதை அமைக்கப்பட்டுள்ளது, பாதையின் இருபுறமும் ஏராளமான உடைந்த கல் மற்றும் பல்வேறு சிலைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கோயிலுக்குள் நுழையும் ஒருவருக்கு இது ஒரு அசாதாரண உணர்வைத் தருகிறது. இகோவிலில் சிதறுண்டு கிடக்கும் கற்கள் முழுவதிலும் நன்கு வடிவமைக்கப்பட்ட நடனமாடும் தேவதைகள், மலர் வடிவமைப்புகள், கர்ஜிக்கும் சிங்கம், ஆண்கள் மற்றும் பெண்களின் தெய்வீக உருவங்கள், பல்வேறு கடவுளர் உருவங்கள், உடைந்த தூண்கள் மற்றும் சில சிறிய கோயில்கள் அமைப்புகள் ஆகியன நிரம்பியுள்ளன. கோயில் வளாகத்திற்கு அருகில், அஸ்ஸாம் அரசு ஒரு சிறிய அருங்காட்சியகத்தைத் திறந்துள்ளது. இந்த அருங்காட்சியகம் இந்த இடத்திலிருந்து சேகரிக்கப்பட்ட உடைந்த சிற்பங்களின் சிறந்த தொகுப்பைக் கொண்டுள்ளது.

### தொன்மமும் தொல்லியல் உண்மைகளும்

1. மதன் காம்தேவ் கோவிலோடு இரண்டு தொன்மம் தொடர்புடையதாக உள்ளது. ஒன்று, சிவனின் கோபத்தால் மன்மதன் சாம்பலாக்கப்பட்ட பின்பு ரதியின் வேண்டுதலுக்கிணங்க மன்மதன் புணர்ஜென்மம் பெற்ற இடம் இது. இரண்டு, காம திரயோதசி திதி இந்த இடத்தில் கொண்டாடப்பட்டது.
2. தெற்குநோக்கி ஓடும் சரஸ்வதி நதி பல நேரங்களில் இது வரண்டு காணப்படும். இந்த நதிக்கு மதனாசல் என்ற வேறொரு பெயரும் உண்டு.
3. பக்தியார் கில்ஜி, காம்ரூபை குமரிகடா வழியாக தாக்கிய போது அவரது படைகள் இவ்விடத்தில் தங்கி இருந்தாகவும் அதை அறிந்த காம்ரூப் அரசர், பிரித்து (King Prithu) இவ்விடத்தைச் சுற்றித் தீவைத்தாவும் ஒரு கதை உண்டு. இதற்கு வரலாற்றுச் சான்றுகள் எதுவும் இல்லை.
4. இங்குள்ள சிற்றின்பச் சிற்பங்கள் கஜுராகோவை ஒத்ததாக உள்ளது. ஆயினும் இச்சிற்பங்கள் கஜுராகோ அளவிற்கு அப்பட்டமானதாக இல்லை.
5. அதிகமுள்ள நாட்டியமாடும் சிற்பங்கள் தேவதாசி நடனத்தோடு ஒப்பிடும் வகையில் உள்ளன.
6. இங்குள்ள ஒரு சூரியகடவுளுக்கான சிலையில் தென்னிந்திய சிற்ப வடிவம் காணப்படுகிறது. வெற்றுக்காலுடன் பாதி மலர்ந்த தாமரையின் இதழில் நிற்பது போல் உள்ளது. மதன் காம்தேவ் -வின் சிற்பமும் இந்த அமைப்பிலேயே உள்ளது. தென்னிந்திய சிற்ப வடிவம் இங்கு எப்படி வந்தது என்பதே பலருக்குமான புரியாத புதிராக உள்ளது.
7. தற்போது உள்ள வடக்கு குவகாத்தியே ஒரு காலத்தில் காம்ரூப் நகர் என்று அழைக்கப்பட்டது. இங்கு தான் மதன் காம்தேவ் கோவில் தற்போது உள்ளது. முற்காலத்தில் மக்கள் தங்கிச் செல்லும் இடமாக இது இருந்திருக்கிறது.
8. வைகுந்த தேவி சிலை ஒன்றும் இங்கு உள்ளது. இந்தியாவில் வேறெங்கும் இச்சிலையை அதிகமாகப் பார்க்க முடியாது.
9. மாமல்லபுரம் போன்று ரதக்கோயில்கள் அசாமில் எங்கும் இல்லை. இங்கு மட்டுமே பார்க்க முடிகிறது. அருமையான கட்டுமானத்தைக் கொண்ட பீடமும் முன் மண்டபத்தோடுடைய கர்ப்பக்கிரகமும் அழகான முறையில் இணைக்கப்பட்டுள்ளன.
10. கர்ப்பக்கிரகத்தில் மூன்று தேவியர்களின் சிலை உள்ளது. இதை திரிபுர தேவி என்று கூறுவர்.
11. கர்ப்பக்கிரகத்தில் மூலவர் உமாவும் மகேஸ்வரனும் உள்ளனர். இவர்கள் சிவப்பு நிற துணியால் பாதி உடல் மறைக்கப் பட்டுள்ளனர். இங்கு மகேஸ்வரனின் தொடையில் உமா அமர்ந்திருக்கிருக்கிறார்.

12. முற்காலத்தில் மதன்பூர் என்ற பகுதி சுட்டியாபாரா என்று அழைக்கப்பட்டது. சுட்டியாபாராவில் இன்றளாவும் சிற்பங்கள் செய்யும் மக்கள் வசித்து வருகின்றனர். இவர்களின் மூதாதையர்கள் இக்கோவிலை செய்தாக நம்புகின்றனர்.
13. பால அரசமரபினர் இந்தக் கோவிலை நிர்மானித்திருந்தாலும், அக்காலத்தில் அதிகமாக வந்து சென்ற தென்னிந்திய வணிகர்களின் பங்கும் அவர்களின் தாக்கமும் இக்கோவிலில் அதிகம் உள்ளதாக கூறப்படுகிறது. தென்னிந்தியாவிலிருந்து அக்காலத்தில் அசாம் வரை வணிகம் செய்தவர்கள் யார் என்பது ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்று.

இவ்வளவு தொன்மத்தையும் வரலாற்றையும் தாங்கி வரும் ரதி-மன்மதன் கதை திரைப்பட சித்தரிப்புகளாக பாடல்களில் வெகுமக்களின் ரசனையைத் தாங்கி வந்துள்ளது.

## முடிவுரை

காமன் விழா என்று தமிழக கிராமங்களில் கொண்டாடப்பட்டுவரும் நிகழ்வின் பண்டைய தொடர்பிற்குத் தமிழ் இலக்கியங்களில் இதற்கான பதிவு பெருமளவில் காணக்கிடக்கிறது. ரதி மன்மதன் கதை இந்தியவின் பல்வேறு பகுதிகளில் திரிபுகளுடன் சொல்லபட்டு வருகிறது. வடகிழக்கு இந்தியாவில் உள்ள அசாமில் உள்ள மதன் காம்தேவ் கோவில் இதற்கான தொல்லியல் களமாக உள்ளது. இதன்மூலம் மன்மதன் வழிபாடு பாரததேசம் முழுவதும் இருந்திருக்கிறது என்பது புலனாகிறது. தமிழகத்தில் நாட்டு புறங்களில் “காமண்டி” என்ற பெயரில் காமன் விழா கொண்டாடப்படுகிறது. தொல்லியல் துறையால் கண்டறியப்பட்டுள்ள மதன் காம்தேவ் கோவிலின் சிற்பங்களும் சிதலமடைந்த கோயில் கட்டுமானமும் நேரில் சென்று பார்க்க வேண்டி ஒன்று. வரலாற்றாசிரியர்கள், இக்கோவில் யாரல் கட்டப்பட்டது, ஏன் கட்டப்பட்டது என்பது பற்றி ஒரு சரியான முடிவிற்கு வர முடியாதவர்களாக உள்ளனர். வடகிழக்கு இந்தியாவில் நிலவும் மர்மங்களில் இதுவும் ஒன்று என்பதை நேரில் சென்று பார்த்தவர் உணர்வர். மதன் காம்தேவ் கோயில் குறித்த முறையான ஆய்வுகளும் நிறைய செய்யப்பட வேண்டியுள்ளது.

## சான்றெண் விளக்கம்

1. செயபால்.இரா, அகநானூறு மூலமும் உரையும், பாடல் எண் 368
2. செயபால்.இரா, அகநானூறு மூலமும் உரையும், பாடல் எண் 181
3. விசுவநாதன்.அ, கலித்தொகை மூலமும் உரையும், பக்.147
4. பரிமேலழகர் உரை, திருக்குறள் எண் 1197
5. தீரஜ் குமார் தேகா, வயது 33, (தகவலாளர்), பெஜரா, காம்ரப், அசாம்.

## பார்வை நூல்கள்

1. செயபால் இரா, அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
2. செயபால், இரா. *அகநானூறு மூலமும் உரையும்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
3. விசுவநாதன், அ. *கலித்தொகை மூலமும் உரையும்*, பாடல் எண், 39, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
4. திருக்குறள். பரிமேலழகர் உரை, நேஷனல் பப்ளிகேஷன்ஸ், தியாகராய நகர், சென்னை.
5. தீரஜ் குமார் தேகா, வயது 33, (தகவலாளர்), பெஜரா, காம்ரப், அசாம்.